கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No. 25/2022**

2025-ம் ஆண்டு மே மாதம் 14-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 3 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வெங்கட்ராமன் | வயது | 34 |
| தந்தை பெயர் | புருஷோத்தமன் | ஜாதி | |
| தொழில் | Co-operative society தற்காலிக பணியளர் | மதம் | |
| ஊர் | குமாரமங்கலம் | தாலுக்கா | |

( 1 முதல் 4 எதிரிகள் ஆஜரில் இல்லை. 355 BNSS கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்பொழுது குமாரமங்கலத்தில் வசித்து Co-operative society யில் தற்காலிக பணியாளராக பணியாற்றி வருகிறேன். அசா.1, அசா.2 ஆகியோர்கள் எனக்கு அக்கா ஆவார்கள். எதிரிகள் கோபுராஜன், பழனி, குணா, வசந்தி ஆகியோர்களை தெரியும். எனது அக்காவான அசா.1, அசா.2 ஆகியோர்களை சீதக்கமங்கலம் உக்கடையில் திருமணம் செய்து கொடுத்தோம். எனது அக்காவான அசா.1, அசா.2 ஆகியோர்கள் தற்பொழுது அவர்களது கணவர்களை பிரிந்து வாழ்கிறார்கள். அவர்களின் குடும்பத்தில் எந்த பாகபிரிவினையும் செய்யவில்லை. சீதக்கமங்கலம் உக்கடையில் எனது தாத்தா குஞ்சிதபாதம் பெயரில் விவசாய நிலங்கள் உள்ளது. அந்த விவசாய நிலங்களில் உள்ள போரின் மின் இணைப்பு எனது தாத்தா பெயரில் உள்ளது. அந்த போர்செட்டினுடைய மோட்டார் பழுதடைந்துவிட்டது. சுமார் 5 வருட காலமாக அந்த போர் பயன் இல்லாமல் இருந்தது. அதை சரிசெய்வதற்காக எனது அக்கா உஷாவினுடைய நகைகளை அடமானம் வைத்து போரை சரிசெய்தோம். அதற்கான செலவுகளை கோபுராஜன், பழனி மற்றும் மாரிமுத்து ஆகிய மூவரும் பிரித்துகொள்வோம் என்று கூறியதன் அடிப்படையில் எனது அக்கா உஷாவின் நகைகளை அடகு வைத்து நான் போரினை சரிசெய்தேன். கடந்த 26.10.2020 ம் தேதி எங்களுக்கு சொந்தமான போரிற்கு எதிரி கோபுராஜன் என்பவர் 2 Phase இணைப்பு கொடுக்கும்போது உஷா, மலர்விழி ஆகிய இருவரும் சென்று எங்களுக்கு பணம் எதுவும் தரவில்லை என்றும், 2 Phase இணைப்பு கொடுத்தால் போரினுடைய மோட்டார் வீணாகிவிடும் என்றும், எதிரி கோபுராஜனிடம் கேட்டபோது உங்களால் முடிந்ததை பார்த்துக்கொள்ளுங்கள் என்று கூறினார். எனது அக்கா இருவரும் எலக்டீரிசியனை தடுத்தபோது அருகில் இருந்த கம்பு மற்றும் முறுக்கு கம்பியால் 1 முதல் 4 எதிரிகள் அடித்தார்கள்.

அதில் எதிரி கோபுராஜன் முறுக்கு கம்பியால் அடித்தார். எதிரிகள் பழனி, குணா, வசந்தி ஆகியோர்கள் கம்பால் அடித்தார்கள். அப்போது எனக்கு தகவல் கிடைத்து நானும் சம்பவ இடத்திற்கு சென்று தடுத்தபோது என்னையும் தலை மற்றும் காது மடலிலும் தாக்கினார்கள். எனது அக்கா மலர்விழியை தலையில் தாக்கினார்கள். எனது அக்கா உஷாவிற்கு தலையில் உள்காயம் ஏற்பட்டது. அதன்பிறகு நானும், எனது அக்கா உஷா, மலர்விழி ஆகிய மூவரும் நன்னிலம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்று அங்கு எங்களுக்கு முதலுதவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்து அதன் அடிப்படையில் நாங்கள் மூவரும் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தோம். எனது அக்கா மலர்விழிக்கு தலையில் 16 தையல்கள் போடப்பட்டது. எனக்கு தலையில் 6 தையல்கள் போடப்பட்டது. நான் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தபோது போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் தொடர்பாக என்னிடம் வாக்குமூலம் பதிவு செய்யபப்பட்டு கையொப்பம் வாங்கப்பட்டதா என்றால் வாங்கப்பட்டது. குமராமங்கலம் கிராமத்திற்கும் சீதக்கமங்கலம், உக்கடைக்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 20 கிலோமீட்டர் இருக்கும். நாங்கள் குமாரமங்கலத்திலும் எதிரிகள் சீதக்கமங்கலத்திலும், வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். எனக்கு தகவல் கிடைத்து நான் சென்றதாக சொல்வதற்கு முன்பாக என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது சகோதரிகள் இருவரும் மாரிமுத்து என்பவரின் மகன்களை திருமணம் செய்துகொண்டு பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரிதான். அதனால் எங்கள் இரு குடும்பத்திற்கும் பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரிதான். போர்செட் எனது தாத்தா குஞ்சிதபாதம் பெயரில் உள்ள பொதுவான போர்செட் என்றால் சரிதான். அதில் நாங்களும் எதிரிகளும் சேர்ந்த விவசாயம் செய்து வருகிறோம் என்றால் சரிதான். தண்ணீர் பாய்ச்சுவது தொடர்பாக தான் பிரச்சனை என்றால் சரிதான். 2 பேஸ் இணைப்பு தொடர்பாகவும் பிரச்சனை. எனது சகோதரி உஷாவின் நகைகளை அடமானம் வைத்துதான் எங்களின் தனிப்பட்ட செலவில் நீர்முழ்கி மோட்டார் வைக்கப்பட்ட விவரத்தையும் 5 வருடமாக போர்செட் பயன்படுத்தாமல் இருந்தது என்ற விபரத்தையும் போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் அவ்வாறு கூறவில்லை என்றாலும் தற்போது வழக்கிற்கு வலுசேர்க்கும் விதமாக தற்சமயம் தவறான தகவலை முன் வைக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் எதிரிகள் வசிக்கும் சீதக்கமங்கலம் என்றால் சரிதான். நாங்கள் மருத்துவ சிகிச்சைக்கு சென்றபோது எதிரிகளும் மருத்துவ சிகிச்சை எடுத்து கொண்டார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நாங்கள் மருத்துவ சிகிச்சைக்கு சென்றபோது எதிரிகளும் மருத்துவசிகிச்சையில் இருந்தார்கள் என்றாலும் நான் தற்பொழுது வழக்கிற்காக தெரியாது என்று மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும் எனது

சகோதரிகளும் எதிரிகளை தாக்கியதாக எங்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் அவர்கள் மீது கொடுத்த புகாரும் அவர்கள் எங்கள் மீது கொடுத்த புகாரும் ஒரே சம்பவத்தை சேர்ந்தது என்றால் சரிதான். கம்புக்கும் இரும்பு கம்பிக்கும் வித்தியாசம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். போலீசார் விசாரணையில் என்ன ஆயுதத்தால் தாக்கப்பட்டோம் என்று கூறினேனா என்றால் கூறினேன். இரும்பு ஆயுதம் மற்றும் கம்பால் தாக்கியதாக கூறினேன். ஒரு முறுக்கு கம்பி மூன்று கம்பு பயன்படுத்தப்பட்டது. மேற்படி விபரத்தை போலீஸ் விசாரணையில் தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவித்துள்ளேன். நான் அவ்வாறு கூறவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு ஏற்பட்ட காயம் தொடர்பாக போலீசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. எதிரிகளின் போர்செட்டையும், நிலத்தையும் அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு திட்டமிட்டு நாங்கள் எதிரிகள் மீது தாக்குதலை ஏற்படுத்திவிட்டு அதிலிருந்து தப்பிப்பதற்காக பொய் புகார் கொடுத்து அதனை அனுசரித்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு முழுமையாக சிகிச்சை எடுத்துகொள்ளாமல் தலைமறைவாகி விட்டது தொடர்பாக போலீசார் என்னை விசாரணை செய்தனரா என்றால் நான் முழுமையாக சிகிச்சை எடுதுக்கொண்டேன். நான் முழுமையாக சிகிச்சை எடுத்துக்கொள்வில்லை என்றாலும் எதிரிகள் மீது வழக்கை ஜோடிப்பதற்காக சிகிச்சையில் சேர்ந்து தலைமறைவாகி விட்டேன் என்றால் சரியல்ல. எங்களுக்கு ஏற்ப்பட்ட காயம் எதிரிகளை தாக்கிவிட்டு தப்பிக்கும் போது தடுமாறி கீழே விழுந்ததினால் ஏற்பட்ட காயம் என்றால் சரியல்ல. எதிரிகள் எந்தகாலத்திலும் எங்களை தாக்கவும் இல்லை காயப்படுத்தவும் இல்லை கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றால் சரியல்ல. நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்தை எதிரிகள் தான் காயம் அடைந்தார்கள் நான் அதனை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை

S CINTHA
Digitally signed by S CINTHA
DN: cn=S CINTHA, st=TAMIL NADU, c=+91
Date: 2025.05.14 16:48:26 +0530

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகிளா நீதிமன்றம்,

திருவாரூர்.